JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC//462/2018

: Prosecution P.W --2

NAME : Seyed Ali

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 21.03.2022.

மு.வி.

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன், நான் ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன், சாட்சி நாகூர் மீராள் என் அக்கா ஆவார், எதிரி மைதீன் முகபிலசா என் அக்கா கணவர் ஆவார். என் அக்காவும் அவரது கணவரும் ஆறு ஏழு ஆண்டுகளாக நல்ல முறையில்தான் வாழ்ந்து வந்தார்கள், அவர்களுக்கு குழந்தை இல்லை, நான் என்னுடைய மூன்றாவது குழந்தை சபிகாவை என் அக்காவிடம் வளர்க்க கொடுத்தேன். அதன் பின்பு என் அக்காவுக்கு ஒரு குழந்தை பிறந்தது, அந்த குழந்தைக்கு மனவளர்ச்சி குறைவாக இருந்தது. இரண்டு குழந்தைகளையும் நல்ல முறையில் வளர்த்து வந்தார்கள், அதன் பின்பு என் அக்காவுக்கும், அவரது கணவருக்கும் தீடீர் தீடீர் என்று சண்டை வந்தது, என் அக்கா ஆஜர் எதிரியிடன் ஏன் சண்டை போடுகீறீர்கள், என் லேட்டா வருகீறீர்கள் என்று கேட்டதற்கு எனக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு உள்ளது என்று சொன்னார்,அந்த பெண்ணின் பெயர்

மற்றும் முகவரி எனக்கு தெரியாது. என் அக்காவுக்கு நாங்கள் கொடுத்த 18 கழஞ்சி நகையும், எடுத்துக்கொண்டார். பணம் 35000 த்தையும் எடுத்துக்கொண்டார். அதன் பின் என் அக்காவுக்கும் , பிள்ளைகளையும் எதிரி சரியாக கவனிக்கவில்லை, செலவுக்கும் பணம் கொடுக்காமல் இருந்து வந்தார்,அதன் பின் என் அக்கா ஆறு மாதம் காலம் வீட்டு வாடகை கொடுக்காமல் கஷ்டப்பட்டு இருந்து வந்தார், அதனால் 2018 ம் ஆண்டு 6 வது மாதம் ஒரு நாள் என் அக்கா என் அம்மாவை அழைத்து கொண்டு என் அக்கா கணவர் நடத்தி வரும் ஜெமினி லாலா டீக்கடைக்கு சென்று வீட்டிற்கு ஏன் வரவில்லை, செலவுக்கு பணம் தரவில்லை என்று கேட்டதற்கு என் அக்கா கணவர் என் அக்காவையும் என் அம்மாவையும் அசிங்கமான வார்த்தைகளால் பேசியுள்ளார், இங்கு வந்ததால் வெட்டிவிடுவேன் என்று சொல்லியுள்ளார். என் அக்கா கணவரின் டீக்கடைக்கு பக்கத்திலுள்ள அலி அகமது மற்றும் முகமது இஸ்மாயிலும் என் அக்காவை சத்தம் போட்டு அனுப்பியுள்ளார்கள். இதே என்னிடம் என் அக்கா சொன்னார். இது குறித்து நடவடிக்கை எடுக்க என் அக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார், இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு/வி

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).